# The Linguistic Style of the Tirupattur District's Vatteluttu Script (inscriptions, Hero Stones) from a Grammatical Perspective)

**Dr. S. Sivachandrakumar**
*Research Supervisor & Assistant Professor*
*PG and Research Department of Tamil*
*Sacred Heart College (Autonomous), Tirupattur District*

**M. Soundarya**
*Full-time Doctoral Research Scholar*
*PG and Research Department of Tamil*
*Sacred Heart College (Autonomous), Tirupattur*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18933648

**bstract**
*External evidence such as inscriptions, copper plates, and other artifacts serve as proof of the existence of the ancient Tamils. The inscriptions engraved on such stone tablets provide a wealth of information about the language of the period in which they were inscribed, the scribes, the society, and much more. Various writing systems such as Tamil-Brahmi, Vatteluttu, and Tamil are found. In this regard, This research paper examines the Vatteluttu script (inscriptions, hero stones) of Tirupattur district from a grammatical perspective.*
***Keywords :*** *Inscriptions, Copper Plates, The Scribes, The Society, Tamil-Brahmi, Vatteluttu, Vatteluttu Script (Inscriptions, Hero Stones) of Tirupattur District from a Grammatical Perspective.*

**References**

1. Dr. A. Prabhu, Historical Remains of Tirupattur District from an Archaeological Perspective, Bharathi Book House, 32, First Floor, Municipal New Commercial Complex, Old Bus Stand, Vellore, 2021.
2. Dr. S. Thirugnanasambandam, Tholkappiyam – Eluthathikaram, Kathir Publications, Thiruvaiyaru, 2013.
3. Dr. K. Mohangandhi, Kaninilam M. Munisamy, Historical Evidences of Tirupattur District (Volume-1), Bharathi Book House, 32, First Floor, Municipal New Commercial Complex, Old Bus Stand, Vellore – 632 004, 2020
4. R. Nagaswamy, Tamil Script, Epigraphy, Tamil Nadu State Department of Archaeology, Chennai, 2010.

# இலக்கண நோக்கில் திருப்பத்தூர் மாவட்ட வட்டெழுத்து (கல்வெட்டு, நடுகல்) மொழிநடை

***முனைவர சு. சிவசந்திரகுமார்***
உதவி பேராசிரியர் மற்றும் நெறியாளர்
முதுகலை மற்றும் தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்

***ம. சௌந்தர்யா***
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டையத் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களாகப் புறச்சான்றுகளான கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இன்ன பிறவும் உள்ளன. அவ்வாறான கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், அவை பொறிக்கப்பட்ட கால மொழி, எழுதியவர்கள், சமூகம் போன்ற பல தகவல்களைத் தருகின்றன. தமிழி, வட்டெழுத்து, தமிழ் போன்ற பல்வேறு எழுத்து முறைகள் காணப்படுகின்றன. அவ்வகையில் இலக்கண நோக்கில் திருப்பத்தூர் மாவட்ட வட்டெழுத்து (கல்வெட்டு, நடுகல்) பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.*

***திறவுச்சொற்கள் :*** *கல்வெட்டுகள், செப்பேடுகள், எழுத்தர்கள், சமூகம், தமிழ்-பிராமி, வட்டெழுத்து, திருப்பத்தூர் மாவட்டத்தின் வட்டெழுத்து எழுத்துமுறை (கல்வெட்டுகள், நடுகற்கள்) ஒரு இலக்கண கண்ணோட்டத்தில்.*

## முன்னுரை

தமிழ் நாட்டின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் நடுகற்களில் வெட்டடப்பட்டவை ஆகும். தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களிலுள்ள செய்திகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன. தொல்காப்பியத்தில், போர்க்களத்திலே வீரச்சாவு அடைந்தோருக்குக் கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்தலும் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறாக நடுகற்களில் தோன்றிய கல்வெட்டுக்கள் பல்லவர் காலத்தில் தேவைகளுக்கும் பயன்படத் தக்கதாக வளர்ச்சியடைந்தன. அந்நடுகற்கள் இலக்கண விதிகளைப் பின்பற்றி உள்ளதா என்பதனை ஆராய்வதே இலக்கண நோக்கில் திருப்பத்தூர் மாவட்ட வட்டெழுத்து (கல்வெட்டு, நடுகல்) இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## வட்டெழுத்து × ஓர் அறிமுகம்

பண்டைத் தமிழகத்தில் தமிழ் மொழி வரிவடிவில் எழுத்து நிலை வழக்கில் இருந்துள்ளதனை நடுக்கற் பொறிப்பு, ஏட்டுச்சுவடி ஆகியவற்றால் அறிய முடிகிறது. பல்லவ மன்னன் சிம்மவர்மன் காலம் முதல் இரண்டாம் நந்திவர்மன் காலம் முடிய வட்டெழுத்தில் தான் நடுகல் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.


*தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, தர்மபுரி, விழுப்புரம், வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் கிடைத் திருக்கின்ற 200க்கும் மேற்பட்ட நடுகற்களின் ச ான்றுகள் வட்டெழுத்து வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இரா. நாகசாமி அவர்கள் தமிழி என்ற எழுத்தில் இருந்து தான் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றுள்ளது என்று கூறுகிறார்ங்1சி. ஐராவதம் மகாதேவனும் தமிழ் பிராமியிலிருந்து தான் வட்டெழுத்து வளர்ச்சி பெற்றது என்பதனை ஒப்புக்கொள்கிறார்ங்[2]சி.*


*பல்லவர் ஆட்சியில் தொண்டை மண்டலத் தில் வட்டெழுத்து வழக்கில் இருந்துள்ளனங்3சி. வளைந்தக் கோடுகளால் ஆன வடிவம் அமைந்திருப்பதால் "வட்டெழுத்து' என்று பெயர் பெற்றது.*

*"பர்னல்' என்பார் பினிஷிய அல்லது அராமிக் எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் அசோகன் பிராமிலிருந்து வேறானது என்றும் தமிழெழுத்தை விட மிகப் பழமையான ஒன்று நாளடைவில் வளைந்த கோடுகளையே அதிகமாகப் பெற்றிருந்ததால் இந்த வகை தமிழெழுத்து வட்டெழுத்தின் செல்வாக்கை குறைத்துவிட்டது என்றும் திருக்குறளும், தொல்காப்பியமும் வட்டெழுத்தில் தான் எழுத பெற்றிருக்க வேண்டும் என்று கருதி உள்ளார்ங்[4]சி.*

### குண்டுரெட்டியூர் நடுகல்

*ஏலகிரி மலையடிவாரத்தில் உள்ள பாறையில் இந்தக் கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டு, தூய தமிழ் வட்டெழுத்துகளால் "9' வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது, சமணப் பள்ளிகளுக்கென வழங்கப்பட்ட "பள்ளிச்சந்தம்' என்பதைக் குறித்தும் அதன் எல்லைகள் குறித்தும் விவரிக்கிறது. "ஸ்ரீ புருஷ வர்மன்' என்ற மேலைக்கங்க மரபைச் சார்ந்த மன்னனின் 25-ஆம் ஆட்சிக் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதாகும். ஸ்ரீ புருஷவர்மன் மன்னன் தெற்கு கர்நாடகம் மற்றும் வட தமிழகத்தை ஆட்சி செய்தவர். இவரது காலம் கி.பி.726 முதல் கி.பி.788 வரையாகும். இக்கல்வெட்டு கி.பி 751-இல் பொறிக்கப்பட் டுள்ளது. சுமார் 1,270 ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாகும். இந்தப் பள்ளிச்சந்தையை "மிறை அடக்கியார்' என்ற சிற்றரசனின் மகன் "கடுகட்டியார்' வழங்கியுள்ளார். இவர் ஸ்ரீ புருஷ வர்மனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளான "கோவூர்நாடு' "எயின்நாடு' ஆகியவற்றை ஆட்சி செய்தவர். கடுகட்டியார் வழங்கிய பள்ளிச் சந்தத்தின் 4 எல்லைகளை விளக்கி அந்நிலத் தின் விளைச்சல் பாதுகாக்கப்பட்டு, சமணப் பள்ளிகளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதை இக்கல்வெட்டு விளக்குகிறது ."ஸ்வஸ்திஸ்ரீ' என்ற சொல்லை "சுவத்திரிசிரி' என்றும் புருஷவர்மன் என்பதை "புருச விக்கிரமபருமர்' என்றும் தமிழ்ப்படுத்திக் குறிப்பிட்டுள்ளனர். கங்க மன்னர்கள் சிறந்த சமணப் பற்றாளர்கள் என்பதற்கு இக்கல்வெட்டு சிறந்த சான்றாகும்ங்[5]சி.*






**"ஆவொடு அல்லது யகரம் முதலாவது"**
***(தொல்.எழுத்ததிகாரம்.மொழி மரபு. 65)***

### யாண்டிருபத்தைந்தாவது

*ஆகாரத்தோடன்றி பிற உயிர்களோடு யகரம் முதலாவதாக வருவது இல்லை என்ற தொல்காப்பிய விதியை இக்கல்வெட்டு பின்பற்றி வந்துள்ளது.*

### அம்பலூர் நடுகல்

கி.பி 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இரண்டு நாய்களுக்காக எடுக்கப்பட்ட நடுகல். அம்பலூரைச் சார்ந்த “கோவந்’ என்பவனில் நாய்களான “முழகனும்’ “வந்திக்காகத்தியும்’ பன்றிகளைக் கொன்று இறந்தமை என்னும் செய்தியினை இக்கல்வெட்டு கூறுகிறதுங்6சி.



“’஡ஞணநமன என்னும் புள்ளிமுன்னர்
தத்தம் இசைகள் ஒத்தன நிலையே’’
(தொல்.எழுத்ததிகாரம்.நூன் மரபு. 25)


஡ஞணநமன என்னும் ஆறு மெய்களின் முன்னர் நெடுங்கணக்கில் அவை ஒவ்வொன்றுக்கும் மேலுள்ள கசடதபறக்கள் ஆறும் முறையே மயங்குதற்கு உரியனவாகும். ஆறு மெல்லெழுத்துக்களுடனும் ஆறு வல்லெழுத்துக்கள் முறையே மயங்கலின் இந்நூற்பாவால் ஆறு மயக்கநிலை கூறப்பட்டது.

### வந்திக்கா

வேற்றுநிலை மெய்மயக்கம் இந்நடுகல் கல்வெட்டில் பயின்று வந்துள்ளது.

### கொரட்டி நடுகல்

திருப்பத்தூர்மாவட்டம்“கொரட்டி’ என்னும் ஊரில் இக்கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆறுகுழுகூர் ஊரின்மேல் காடுவெட்டிப் படை தொடுத்தபோரில் கோயிற்றமன் வாணிக வாணிளவரையர் போரிட்டு இரண்டு குதிரைகளையும், குதிரை வீரரையும் கொன்று தானும் இறந்தான். அதற்காக நெத்தொர்ப்பட்டியாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு 7 வரிகளில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டதாகும்ங்7சி.



“ஃஆ எ ஒ எனும் மூவுயிர் ஞகாரத்து உரிய’’
(தொல்.எழுத்ததிகாரம்.மொழி மரபு. 64)


ஆ எ ஒ எனும் மூன்றுயிர்களும் ஞகார ஒற்றொடு மொழிக்கண் முதலாகும்.

### ஞான்று

இங்கு ஞா என்னும் எழுத்து ஆ என்னும் உயிர் எழுத்தோடு சேர்ந்து ஞான்று என வந்துள்ளது.

### மேல்பட்டு நடுகல்

திருப்பத்தூர் மாவட்டம், மேல்பட்டு என்னும் ஊரில் வேடியப்பன் கோவிலுக்கு முன் இந்த நடுகல் கண்டறியப்பட்டது. இந்நடுகல் கி.பி 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும். எட்டு வரிகளுடன் வட்டெழுத்தில் காணப்படுகிறது. சி ங்க விண்ண பருமர் காலத்தில் பணங்கதை பக்க டான் என்பவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் ஆகும். கல்வெட்டின் நடுப்பகுதி சிதைந்து காணப்படுகிறது.




“ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும்
அப்பதினொன்றே புள்ளி இறுதி’’
(தொல்.எழுத்ததிகாரம்.மொழி மரபு. 78)

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்று கூறப்பட்ட பதினொன்றும் புள்ளிகளில் மொழிக்கு ஈராக வரும்.

இங்கு தொல்காப்பிய விதிப்படி மெய்யெழுத்துக்களில் மொழிக்கு இறுதியாக வரும் (ஞணநமனயரலவழள) எழுத்துக்களாக இந்நடு கல்லில் பருமர், பக்காடன், பட்டான் வந்துள்ளது.

ஏலகிரிமலை மங்கலம் நடுகல்

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரிமலை மங்கலம் என்னும் ஊரில் இந்நடுகல் கண்டறியப்பட்டுள்ளது. நுளம்ப மன்னன் ஸ்ரீ மாறன் பல்லவன் காலத்தை சார்ந்த நடுகல் ஆகும்ங்8சி. இக்கல்வெட்டு, திருப்பத்தூர் அழிந்த போது"தாயாலூர்' கிராமத்தைச் சேர்ந்த "மழவர் பையன்'' என்ற வீரன் போரிட்டு இறந்த செய்தியைக் கூறுகிறது.



**"சகரக் கிளவியும் அவற்று ஓரற்றே**
**அ ஒ ஔ எனும் மூன்றலங்கடையே''**
***(தொல்.எழுத்ததிகாரம்.மொழி மரபு. 62)***

சகரம் அ,ஒ,ஔ என்னும் மூன்று உயிர்களை தவிர்த்து ஏனைய ஒன்பது உயிர்களோடு இணைந்து மொழிக்கு முதலாக வரும்.

**சீமாறன் × ச்+ஈ=சீ**

தொல்காப்பிய விதி இக்கல்வெட்டில் பொருந்தி வருகிறது.

**முடிவுரை**

பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டுகளும், பிற தொல்பொருட்களும் பெருமளவில் கிடைக்கப் பெறாத கால கட்டத்தில், வட்டெழுத்து கல்வெட் டுகள் ஒரு குறிப்பிட்ட அளவிலும், பிற்காலத் தமிழ் எழுத்து கல்வெட்டுகள்பெருமளவிலும் கண்டுப்பி டிக்கப்பட்டன. அதன் காரணமாகவட்டெழுத் தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆய்வியல் அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. மேலே குறிப்பிட்ட ஐந்து கல்வெட்டு களும் இலக்கண விதிகளைப் பின்பற்றி வந்துள்ளன.

**மேற்கோள்கள்**

1. இரா. நாகசாமி , தமிழ் எழுத்து, கல்வெட்டியல் பக்கம் - 9
2. ஐராவதம். மகாதேவன், தமிழ் பிராமி இன்ஸ்கிரிப்ஷன்,பக்கம் 57-73
3. சி. கோவிந்தராசனார் தமிழெழுத்தின் வரிவடிவம், பக்கம் - 53
4. A.C Burnell, Elements of South Indian Paleography (1894)
5. ஆ.பிரபு,தொல்லியல் நோக்கில் திருப்பத்தூர் மாவட்ட வரலாற்று எச்சங்கள்,ப-10
6. ஆவணம் 12, ப- 3
7. மேலது,ப × 5

**ஆய்விற்கு உதவிய நூல்கள்**

1. முனைவர் ஆ.பிரபு, தொல்லியல் நோக்கில் திருப்பத்தூர் மாவட்ட வரலாற்று எச்ச ங்கள்,பாரதி புக் ஹவுஸ், 32, முதல்மாடி மாநகராட்சி புதிய வணிக வளாகம், பழைய பஸ் நிலையம், வேலூர், 2021
2. முனைவர் ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் × எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2013
3. முனைவர் க.மோகன்காந்தி, காணிநிலம் மு.முனிசாமி, திருப்பத்தூர் மாவட்ட வரலாற்றுத் தடையங்கள் (தொகுதி-1), பாரதி புக் ஹவுஸ், 32, முதல்மாடி மாநகராட்சி புதிய வணிக வளாகம், பழைய பஸ் நிலையம், வேலூர் × 632 004, 2020
4. இரா. நாகசாமி , தமிழ் எழுத்து, கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2010